1992 ஏப்ரல் 1]

425—

திருமேனி ஏரி நீர் ஏற்றுத் திட்டம்.

*4813—திரு. கி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) பட்டுக்கோட்டை தொகுதியை ஒட்டியுள்ள திருமேனி ஏரியில் நீர் ஏற்றுத் திட்டத்திற்கு (பம்பிங் திட்டம்) 56 இலட்சம் ரூபாயில் கடந்த காலத்தில் மதிப்பீடு போட்டு திட்டம் நிறைவேற்றப்படாமல் உள்ளதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தஞ்சை மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம் அருகிலுள்ள திருமேனி ஏரியிலிருந்து இறவைப் பாசனத் திட்டம் ஏதும் ஆய்வில் இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. கி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த திருமேனி பம்பிங் ஸ்கீம் என்ற திட்டத்தை 10 ஆண்டுகளுக்கு முன்பு நம்முடைய வருவாய்த் துறை அமைச்சர், திரு. எஸ். டி. சோமசுந்தரம் அதை ஏற்படுத்தித் தந்து, பிளான் போட்டார்கள். அந்த ஃபைல் மன்னார்குடியில் இருக்கிறது என்று தெரிய வருகிறது. இந்தத் திட்டத்தை புரட்சித் தலைவி, மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆட்சியில் மறுபரிசீலனை செய்து, செயல்படுத்த முன்வருவார்களேயானால், 3,000 ஏக்கர் நிலத்திற்கு பாசன வசதி கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு, அதை மறுபரிசீலனை செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சாவூர் மாவட்டம், மன்னார்குடி தாலுக்காவில் திருமயிலாக்கோட்டை கிராமத்தில் திருமேனி ஏரி இருக்கிறது. இது மழையினால் நீர் பெறும் ஒரு ஏரி. இருந்தாலும் பாமினி ஆற்றின் குறுக்கே சேரன்குளம் ரெகுலேட்டரிலிருந்து வரும் வாய்க்காலிலிருந்து தண்ணீர் பெற்றுக் கொண்டிருக்கிறது. ஆகவே இறவைப் பாசனத்திற்கு இந்தத் திட்டம் அரசினுடைய பரிசீலனையில் இல்லை. இந்த ஏரியின் கீழ் பதிவு செய்யப்பட்ட ஆயக்கட்டு 266 ஏக்கர் ஆகும். திருமேனி ஏரி பொதுப் பணித் துறை பராமரிப்பில் இருக்கின்ற காரணத்தாலே இந்தத் திட்டம் தற்போது ஆய்வில் இல்லை.

[1992 ஏப்ரல் 1

திரு. கி. பாலசுப்பிரமணியன் : இத்திட்டம் வரும் ஆண்டிலாவது நிறைவேற்றப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : நான் ஏற்கெனவே சொல்லி இருக்கிறேன். பொதுப் பணித் துறை பராமரிப்பில் இருக்கின்ற காரணத்தால் இறவைப் பாசனத் திட்டம் இன்றைக்கு ஆய்வில் எடுத்துக் கொள்ளப்படவில்லை. அப்படி ஏதாவது புதிய திட்டத்தை எடுக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினரவர்கள் அதற்குரிய வழி வகைகளோடு இந்தத் துறையை அணுகினால், அந்தத் திட்டம் பற்றி ஆராயப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண், 426 திரு. செ.கு. தமிழரசன், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

426—

வந்தவாசி நகருக்குக் குடிநீர் வசதி.

*144—திரு. செ.கு. தமிழரசன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

வந்தவாசி நகரத்தில் குடிநீர் பஞ்சத்தைப் போக்க விரைவில் நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா ?

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வந்தவாசி நகரில் தற்போதைய மக்கள் தொகைக்கு நாள் ஒன்றுக்கு 11.50 இலட்சம் லிட்டர் நீர் தேவை என கணக்கிட்டு, 1990–91 ஆம் ஆண்டு வறட்சி நிவாரணப் பணியின்கீழ் கூடுதல் கொடு திறன் கொண்ட டர்பைன் மோட்டார் பொருத்தப்பட்டு தற்பொழுது நாள் ஒன்றுக்கு 12 இலட்சம் லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

முற்பகல் 10–10

திரு. செ. கு. தமிழரசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது செய்யாறு நகரத்திலிருந்துதான் கூட்டுக் குடிநீர் திட்டத்தின் மூலம் வந்தவாசி நகருக்குத் தேவையான குடிநீர் சப்ளை செய்யப்படுகிறது. ஏறக்குறைய 15 கிலோ